செ.வெ.எண்:69 நாள்:27.11.2018

**கரூர் மாவட்டம்**

**வீட்டுத் தோட்டக்காய்கறி விதை தளைகள் வழங்கப்படவுள்ளது, பொதுமக்கள் தளைகளை பெற்று பயன்பெறலாம்-மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழகத்தின் புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு, வீட்டு தோட்டக்காய்கறி விதை தளைகள் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றதால் இவ்வாண்டும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி நடப்பாண்டில் ரூ.25/- மதிப்புடைய உயர் விளைச்சல் தரும் பீர்க்கன், தக்காளி, வெண்டை, முருங்கை, தட்டைப்பயிர், மிளகாய் மற்றும் அவரை ஆகிய காய்கறிகளில் ஏதேனும் ஐந்து காய்கறி விதைகள் அடங்கிய 3360 எண்களில் காய்கறி தளைகள் கரூர் மாவட்ட புறநகர் பகுதிகள் மற்றும் கிராமப்புறங்களில் 40 சதவீத மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. ரூ.25/- மதிப்புடைய ஒரு காய்கறி விதை தளைக்கு அரசு மானியமாக ரூ.10/- வழங்கப்படுகிறது. பயனாளிகள் ரூ.15/- செலுத்தி விதை தளைகளை பெற்றுக்கொள்ளலாம். இதற்கென நடப்பாண்டில் ரூ.33600/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு பயனாளியும் அதிகபட்சமாக ஆறு காய்கறி தளைகள் வரை பெறலாம். இத்தளைகளை கரூர் மாவட்டம் முழுவதும் உள்ள கிராமங்கள் மற்றும் புறநகர்களில் உள்ள மக்கள், தங்கள் பகுதிகளில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களின் மூலம் பெற்றுப் பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் கரூர் மாவட்டத்தின் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்கள் காய்கறிகளை அதிக அளவு உட்கொள்ளும் வாய்ப்பைத் தருகிறது.

இவ்வாறு, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கரூர்.**